**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**இ.ம.எண். 1/2023**

**இன்**

**அ.வ.எண். 480/2014**

1. V. முத்துச்சாமி
2. குப்பாத்தாள் ----- மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்

/எதிர்/

S. பிரேமா
(வாதியின் அதிகாரம் பெற்ற முகவர்
திரு. சக்திவேல் மூலம்)
(Power recognized as per Order in
I.A.No.460/2021, Dated : 28.03.2022) ----- எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது 12.09.2023 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P.R.D. ரவி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் C. ராமமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி சி.பி.சி. ஆர்டர் 8 ரூல் 9 மற்றும் பிரிவு 151-ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதி பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக மனுதாரர்களின் வழக்கறிஞர், வழக்கறிஞர் அலுவலகம் வரும்படி அனுப்பிய தபால் மனுதாரர்களுக்குக் கிடைக்காததால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேலும் 1-ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போன காரணத்தாலும் வழக்கறிஞரை சந்தித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை. தற்போது மனுதாரர்கள் வழக்கறிஞரை சந்தித்து கூடுதல் எதிர்வழக்குரை தயார் செய்து இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளார். அதனை ஏற்றுக்கொள்ளக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனு பொய்யானது நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா சொத்துக்கள் மற்றும் பிற சொத்துக்கள் ஆதியில் சுந்தரராஜன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்ததில் சுந்தரராஜன் இறப்பிற்குப் பின்பு மேற்படியாரின் வாரிசுகளான 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு தலா 1/3 பாகம் பாத்தியப்பட்டதாகவும், 1, 2 பிரதிவாதிகளுக்கு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் 08.02.2006 மற்றும் 30.05.2006 ஆகிய தேதிகளில் 3-ல் 2 பாக சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளனர். அவர்கள் தங்களுக்கு உரிய 2/3 பாகத்தை கிரையம் செய்து கொடுக்காமல் 3 பாக சொத்துக்களையும் கிரையம் செய்து கொடுத்துள்னர். 5-ம் பிரதிவாதி மேஜரான பின்பு அவரது 1/3 பாக சொத்துக்களைப் பொறுத்து 11.05.2010 அன்று சக்திவேல் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் வழங்கியுள்ளார். அதனடிப்படையில் செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் 1/3 பாகத்தைப் பொறுத்து சொத்து உரிமை மாற்றம் நடைபெற்று பதிவு செய்யப்பட்ட பின்பு 5-ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்துவிட்டார். பொது அதிகாரத்தின் அடிப்படையில் ஆவணங்கள் ஏற்பட்ட பிறகு பொது அதிகாரத்தை ரத்து செய்வதில் எவ்வித பலனும் இல்லை. 5-ம் பிரதிவாதி தன் கணவரின் பெயர் சக்திவேல் என்பதால் யாருக்கு பொது அதிகாரம் வழங்கினோம் என்பது குறித்து புரியவில்லை எனத் தெரிவித்துள்ளார். அவர் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ள நிலையில் பொது அதிகார சரத்துக்களைப் படித்துப்பார்த்தே அவர் கையெழுத்து செய்துள்ளார். தற்போது பொய்யாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு:-**

மனு, எதிர்உரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞர் அலுவலகம் வருமாறு வழக்கறிஞர் அனுப்பிய தபால் தங்கள் கைக்கு கிடைக்கவில்லை என்றும், 1-ம் பிரதிவாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் வழக்கறிஞரை சந்தித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் பொறியியல் பட்டதாரியான 5-ம் பிரதிவாதி தன் கணவர் சக்திவேல் பெயருக்கு தான் பொது அதிகார ஆவணம் கொடுத்தாக எண்ணி ஆவணம் ஏற்படுத்தினார் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், அவர் படித்தவர் என்பதால் பொது அதிகார ஆவணத்தை நன்கு படித்து விட்டுத் தான் கையொப்பம் செய்திருப்பார் என்று தெரிவித்து கூடுதல் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் தற்போது வரை வழக்கின் விசாரணையானது துவங்கப்படவில்லை. இருதரப்பிலும் போதிய வாய்ப்புகளைக் கொடுத்து அதன்பிறகு வழங்கப்படும் நீதியே முறையானதாக இருக்கும், தற்போது வரை வழக்கின் விசாரணை துவங்கப்படவில்லை என்பதால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரர்களை அனுமதிக்கலாம் என்றும், இவ்வாறான மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்விதத் துன்பமும் இல்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.10.03 18:09:58 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2023.10.03 18:10:04 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**